**கவனிக்க.**-2022.04.29 ஆந் திகதிய 2278 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.

**கவனிக்க.**-2022.05.06 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி VI இல் கேகாலை மாவட்டத்துக்குரிய நீதாசன வலயங்களின் யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று தமிழ் , சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்றது.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2279 - 2022 මැයි මස 06 වැනි සිකුරාදා - 2022.05.06

*2279 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு மே மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 754 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 755 |
| உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 758 |
| அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| ஏல விற்பனைகள் | 760 |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2022, மே மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2022, மே மாதம் 13 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


753 - B 082341 - 405 (2022/05)

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## இலங்கை நில அளவைத் திணைக்களம்

### விலைமனுக் கோரல்

***பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல் - 2022***

*கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை இரண்டு வருட காலத்திற்கு வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகங்களின் அலுவலகங்களில் மனுக் கோரல்கள் 2022.05.20ஆந் திகதியன்று பிற்பகல் 2.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினம் விலைமனுக் கோரல்கள் பி. ப. 2.05 மணிக்கு திறக்கப்படும்.*

| *மாகாணம்* | *மாவட்டம்* | *பிரதேச நில அளவை அலுவலகம்* | *கேள்விமனு ஒப்படைத்தல்* | *அருகில் உள்ள நகரம்* | *தேவைப்படும் திகதி* |
|---|---|---|---|---|---|
| தென் மாகாணம் | மாத்தறை | கம்புறுப்பிட்டிய | மாகாண நில அளவையாளர் நாயகம் (தென் மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகம், காலி. | கம்புறுப்பிட்டிய நகரஎல்லைக்கு அருகில் | 2022.10.02 |
| மத்திய மாகாணம் | மேலாண்மை கண்டி | மினிபே | மாகாண நில அளவையாளர் நாயகம் (மத்திய மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகம், கன்னோருவ, பேராதனை. | மினிப்பே நகரைச் சுற்றி | 2022.06.01 |
| தென் மாகாணம் | அம்பாந் தோட்டை | திஸ்ஸ மஹாராமை | மாகாண நில அளவையாளர் நாயகம் (தென் மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகம், காலி. | திஸ்ஸமஹாராமை நகரைச் சுற்றி | 2022.07.02 |
| ஊவா மாகாணம் | பதுளை | வெலிமடை | மாகாண நில அளவையாளர் நாயகம் (ஊவா மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகம், சேர்ச் ரோட், பதுளை. | வெலிமடை நகரைச் சுற்றி | 2022.06.01 |
| மேல் மாகாணம் | கம்பஹா | ஜா-எல | மாகாண நில அளவையாளர் நாயகம் (மேல் மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகம், கொழும்பு 05. | ஜா-எல நகரைச் சுற்றி | 2022.07.01 |
| சப்பிரகமுவ மாகாணம் | கேகாலை | கேகாலை | மாகாண நில அளவையாளர் நாயகம் ( சப்பிரகமுவ மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகம், புதிய நகரம், இரத்தினபுரி. | கேகாலை நகரைச் சுற்றி | 2022.07.01 |

**பூரணப்படுத்தப்பட வேண்டிய பொதுவான தேவைப்பாடுகள்.-** அனைத்துக் கட்டிடங்களும் பாதுகாப்பு சுற்று மதில் அல்லது கம்பி வேலி மூலமாக பாதுகாக்கப்பட்டிருத்தல் வேண்டும். தண்ணீர் குழாய் வசதியினைக் கொண்டிருப்பதுடன் அழுக்குகள் மற்றும் வடிநீர் செல்வதற்கான முறையான வடிகாலமைப்பு இருத்தல் வேண்டும். தனியான நீர்மானி மற்றும் மின்மானி என்பன வேறு வேறாக பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும். உரிய இடத்திற்கு அண்மித்த பிரதேசங்களில் இருந்து அதிக ஒலியை எழுப்பக்கூடிய தொழிற்சாலைகளோ அல்லது அதுபோன்ற வேறு ஏதாவது பட்டறைகளோ இல்லாதிருத்தல் வேண்டும். கட்டிடம் ஸ்தாபிக்கப்பட்டிருப்பது பெருந்தெருவுக்கு அண்மித்ததாக இல்லாதிருப்பின் அதற்குச் செல்வதற்கு முறையான போக்குவரத்துப் பாதை இருத்தல் அவசியமாகும். குறைந்தது மூன்று வாகனங்களை நிறுத்துவதற்கான வசதிகள் மற்றும் வாகன தரிப்பிட வசதிகள் இருக்க வேண்டும். எல்லைக் கற்கள் தயாரிப்பதற்கான இட வசதி இருப்பதோடு ஆகக் குறைந்தது பத்து அலுவலர்கள் இருக்கக்கூடிய அறை அல்லது இடவசதிகள் இருக்க வேண்டும். கட்டிடத்தின் பரப்பளவு குறைந்தது 2,500 சதுர அடி அல்லது அதற்கு மேற்பட்டதாக இருக்க வேண்டும்.

கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினைப் பூரணப்படுத்த வேண்டிய பொதுவான தேவையான சகல விபரங்களுடனான மனுக்கோரல்கள் அது அடங்கிய தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "பிரதேச நில அளவை அலுவலகங்களை வாடகைக்குப் பெறுதல் (இடத்தின் பெயர்)" எனக் குறிப்பிட்டு 2022.05.20ஆந் திகதியன்று பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகத்திற்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படவோ அல்லது நேரடியாக கையளிக்கப்படவோ வேண்டும்.

நில அளவையாளர் நாயகம்.

நில அளவையாளர் நாயகம் அலுவலகம்,
கிருல வீதி,
கொழும்பு 05.

**பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல் - 2022**

விலைமனுக் கோரல் விண்ணப்பப்படிவம் - 2022

**கட்டிட உரிமையாளருக்காக :**

01. முழுப்பெயர் :-------------------------------------------------------------------------------------------------.
02. முகவரி :----------------------------------------------------------------------------------------------------.
03. தொலைபேசி இலக்கம் :-------------------------------------------------------------------------------------.
04. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :------------------------------------------------------------------------.

**கட்டிடம் தொடர்பாக :-**

01. எந்த பிரதேச நில அளவை அலுவலகத்திற்காக கட்டிடம் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளது ? :--------------------------
-----------------------------------------------------------------------------------------------------------.
02. மாதாந்த வாடகைத் தொகை :-----------------------------------------------.
03. ஸ்தாபிக்கப்பட்டுள்ள இடத்தின் முகவரி :-----------------------------------------------------------------------.
04. உரிய நகரத்தில் இருந்து ஸ்தாபிக்கப்பட்டுள்ள இடத்திற்கு உரிய தூர அளவு கி. மீ. :---------------------------------;
05. இடத்தின் விஸ்தீரணம் :------------------------------------------------------------------------------------
06. கட்டிடத்தின் விஸ்தீரணம் வர்க்க அடியளவும் அறைகளின் எண்ணிக்கை தொடர்பான விபரங்கள் :------------------------
07. தனியாக அவதானிக்கக்கூடிய நீர்மானி பொருத்தப்பட்டுள்ளதா ? :-------------------------------------------------.
08. தனியாக அவதானிக்கக்கூடிய மின்மானி பொருத்தப்பட்டுள்ளதா ? :-----------------------------------------------.
09. பாதுகாப்பு எல்லை தொடர்பான விபரம் (மதில்/கம்பி /வேலி) :------------------------------------------------------.
10. நிறுத்தி வைக்கக்கூடிய வாகனங்களின் எண்ணிக்கை ? :-------------------------------------------------------.

மேலே என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை என்றும், வழங்கப்பட்டுள்ள தகவல் தவறானது எனத் தெரியவரும் பட்சத்தில் என்னால் அனுப்பப்பட்டுள்ள இந்த விலைமனு நில அளவையாளர் நாயகத்தினால் நிராகரிக்கப்படும் என்பதனை நான் நன்கு அறிவேன் என்றும் இத்தால் அறியத்தருகிறேன்.

---------
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

05-63

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## நீதிவான் நீதிமன்றம் - பருத்தித்துறை

*சான்றுப் பொருட்களின் ஏல விற்பனை*

*பறிமுதல் செய்யப்பட்டதும், இதுவரை உரிமை கோரப்படாததுமான கீழ்வரும் சான்றுப் பொருட்கள் எதிர்வரும் 2022.06.25 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு பருத்தித்துறை நீதிமன்ற வளாகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.*

*நிபந்தனைகள்.-*

*1. குறிப்பிட்ட பொருட்கள் சம்பந்தமாக உரிமை கோருபவர்கள் இருப்பின் ஏல விற்பனை ஆரம்பிப்பதற்கு முன்னர் உரிமைக் கோரிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்.*

*2. ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு 1/2 மணித்தியாலத்திற்கு முன்னர் குறிப்பிட்ட பொருட்களை பொது மக்கள் பார்வையிட முடியும்.*

*3. ஏல விற்பனையில் பங்கு பற்றுபவர்கள் தம்முடன் தேசிய ஆளடையாள அட்டையை கொண்டு வருதல் வேண்டும்.*

*4. ஏலத்தில் விற்கப்படும் பொருட்கள் உடனடியாக பணம் செலுத்தப்பட்டு நீதிமன்ற வளாகத்தில் இருந்து அப்புறப்படுத்தல் வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.*

*திரு. கிரிசாந்தன் பொன்னுத்துரை,*
*நீதிவான்.*

*நீதிவான் நீதிமன்றம்,*
*பருத்தித்துறை,*
*2022.04.21.*

வாகன விபரம்

| *வழக்கு இல.* | *வாகன இல.* | *எண்ணிக்கை* |
|---|---|---|
| *1. 35325* | NPXR 4534 Motor bike | *01* |
| *2. 28094* | YW 1226 Bacco | *01* |
| *3.* B/*122/16( 28748)* | NPYB 9064 Auto | *01* |

*05- 52*

---

*திருத்தம்*

## மாவட்ட /நீதிவான் நீதிமன்றம் - பொத்துவில்

பகிரங்க ஏல விற்பனை அறிவித்தல்

*2022.04.22 ஆந் திகதிய 2277 ஆம் இலக்க வர்த்தமானிப் பத்திரிகை மூலம் வெளியிடப்பட்ட பகிரங்க ஏல விற்பனையானது 2022.05.07 ஆந் திகதி தவிர்க்க முடியாத காரணத்தினால் நடைபெறமாட்டாது என்பதனை அறியத்தருகின்றேன்.*

*மேலும் , குறித்த ஏல விற்பனையானது எதிர்வரும் 2022.05.14 ஆந் திகதி மு.ப. 9.30 மணிக்கு நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றேன்.*

*ஏ.சீ. றிஸ்வான்,*
*மாவட்ட நீதிபதியும் நீதிவானும்.*

*மாவட்ட/நீதிவான் நீதிமன்றம்,*
*பொத்துவில்,*
*2022.04.28.*

*05- 92*

# ஆய விற்பனையும் குத்தகையும்

## புத்தளம் பிரதேச செயலகப் பிரிவில் கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை செய்தல் 2022 - 2023

*2022.07.01ஆந் திகதி தொடக்கம் 2023.06.30 ஆந் திகதி வரை*

2022, யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2023, யூன் மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள காலத்திற்கு 1982, ஓகத்து 20 ஆந் திகதிய 207ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைய பின்வரும் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைக்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. சகல கேள்விப்பத்திரங்களும் எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன் அது உரிய முறையில் தயாரிக்கப்பட்ட படிவமாக இருக்க வேண்டும். மேலும், கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கு அமைய வைப்புத் தொகைப் பணத்தை புத்தளம் பிரதேச செயலகத்தில் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டும் விண்ணப்பிக்கும் தொகையில் குறைந்தபட்சம் 15 % பெறுமதியுள்ள வருமான அத்தாட்சி சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

3. கேள்விப் பத்திரங்களை முறையாக தயாரிக்கப்பட்டு மெழுகிடப்பட்ட உறையிலிட்டு இடது பக்க மேல் மூலையில் தவறணையின் பெயரும் இலக்கமும் பின்வருமாறு "............................ இலக்கமுள்ள ........................ கள்ளுத்தவறணைக்குரிய கேள்விப்பத்திரம்" எனக் குறிக்கப்படல் வேண்டும். கள்ளுத்தவறணை கேள்விப்பத்திரம் 2022.05.24ஆந் திகதி காலை 10.30 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக புத்தளம் பிரதேச செயலாளருக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது மேற்குறிப்பிட்ட காலத்திற்குள் புத்தளம் பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியினுள் இட வேண்டும்.

4. கேள்விப் பத்திரங்கள் 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைய இருத்தல் வேண்டும்.

5. 2022.05.24ஆந் திகதி காலை 10.30 மணிக்கு கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனே எல்லா கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அத்தருணம் கேள்விப்பத்திர கோரிக்கைக்காரர்கள் புத்தளம் பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

6. குறிப்பிட்ட திகதியில் விற்பனை செய்யப்படாத கள்ளுத்தவறணையின் மீள் விற்பனை 2022.06.24 ஆந் திகதி மு. ப.10.30 மணிக்கு மீண்டும் நடைபெறும். அன்றைய தினம் விண்ணப்பங்கள் வர்த்தமானி அறிவித்தலின் படி அமைதல் வேண்டும்.

7. இது தொடர்பான மேலதிக விபரங்களை புத்தளம் பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

எஸ். ஏ.வை.ஆர்.ஜயதிலக,
பிரதேச செயலாளர்,
புத்தளம்.

பிரதேச செயலகம்,
புத்தளம்,
2022.04.18.

**அட்டவணை**

| பிரதேச செயலாளர் பிரிவு | கிராமம் | தவறணை திறக்கும் நேரம் | தவறணை மூடும் நேரம் | தவறணை கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதியும் நேரமும் | கேள்விப்பத்திர வைப்புப் பணம் ரூபா |
|---|---|---|---|---|---|
| புத்தளம் பிரதேச செயலாளர் பிரிவு | சேனைக் குடியிருப்பு | மு.ப. 10.00 மணி<br>பி.ப.5.00 மணி | பி.ப.2.00 மணி<br>இரவு 9.00 மணி | 2022.05.24<br>மு.ப.10.30 | 1,000.00 |

05-04

## கல்பிட்டி பிரதேச செயலகப் பிரிவு

*கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை 2022 - 2023*

*2022 ஆம் ஆண்டு யூலை மாதம் முதல் 2023, யூன் மாதம் வரை*

*2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2023 யூன் மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள 12 மாத காலத்திற்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளில் சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் 1982, ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைவாக ஏற்றுக்கொள்ளப்படும்.*

*2. எந்த ஒரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிமப் படிவங்களில் கேள்வியை சமர்ப்பிப்பதுடன் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கமைய வைப்புப் பணமாக கல்பிட்டி பிரதேச செயலகத்தில் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டையும் விண்ணப்பிக்கும் தொகையில் 15% பெறுமதியுள்ள அத்தாட்சி சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.*

*3. கேள்விப் பத்திரங்களை முறையாக முத்திரையிடப்பட்ட உறையிலிட்டு இடது பக்க மேல் மூலையில் தவறணையின் பெயரும் இலக்கமும் பின்வருமாறு "............................... ஆம் இலக்க ........................ கள்ளுத்தவறணைக்குரிய கேள்விப்பத்திரம்" எனக் குறிக்கப்படல் வேண்டும். 2022.05.25 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன்னர் கல்பிட்டி பிரதேச செயலகத்தில் உள்ள கேள்விப்பத்திர பெட்டியில் இடுதல் அல்லது பதிவுத் தபால் மூலம் மேற்குறிப்பிட்ட நேரம் , திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும்.*

*4. கேள்விப் பத்திரங்கள் 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.*

*5. 2022.05.25 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு கேள்விப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனே எல்லா கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அந்நேரம் கேள்விப்பத்திர கோரிக்கையாளர்கள் இச் செயலகத்திற்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.குறிப்பிட்ட தினத்தில் விற்பனை செய்யப்படாத கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை மீண்டும் 2022.06.27 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு இடம்பெறும்.*

*6. இது தொடர்பான மேலதிக விபரங்களை கல்பிட்டி பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.*

டீ.ஏ.பீ. தனன்சூரிய,
பிரதேச செயலாளர்,
கல்பிட்டி.

*பிரதேச செயலகம்,
கல்பிட்டி,
2022, ஏப்பிறல் 25 .*

**அட்டவணை**

| *இல.* | *பிரிவு* | *எல்லை* | *தவறணை* | *கேள்விப் பத்திர முடிவுத் திகதியும் நேரமும்* | *கேள்வி வைப்புப் பணம் ரூபா ச.* |
|---|---|---|---|---|---|
| *1.* | கல்பிட்டி | தளுவை | கள்ளு | *2022.05.25 மு.ப.10.30* | *1,000.0* |
| *2.* | கல்பிட்டி | ஏத்தாளை | கள்ளு | *2022.05.25 மு.ப.10.30* | *1,000.0* |

*05- 48*

## மாதம்பை பிரதேச செயலாளர் பிரிவு

*2022/2023 க்கான கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை*
*2022.06.01 முதல் 2023.05.30 ஆந் திகதி வரை*

*1. 2022, யூன் மாதம் 01 ஆந் திகதி முதல் 2023, மே மாதம் 30 ஆந் திகதி வரையிலான கால கட்டத்தில் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடபட்டுள்ள கள்ளுத் தவறணைகளில் சில்லறை விற்பனை மூலம் இன்று விற்பனை செய்வதற்கான பிரத்தியேக சலுகையை வாங்குவதற்கான கேள்வி இதன் மூலம் அழைக்கப்பட்டுள்ளது.*

*(அ) தற்போது நடைமுறையில் உள்ள அனைத்து உரிமங்களுக்கும் பொருந்தும் பொதுவான நிபந்தனைகள்.*
*(ஆ ) இலங்கைக் குடியரசின் வர்த்தமானியில் வெளிவரும் கள் வாடகை விற்பனை நிபந்தனைகள்*
*(சிலோன் ) 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதி எண் 207*

*2. ஒவ்வொரு டெண்டரும் எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெறக்கூடிய பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் மற்றும் அதனுடன் டெண்டர் செய்யப்பட்ட மதிப்பில் குறைந்தபட்சம் 15% மதிப்புள்ள சான்றிதழ்கள் இருக்க வேண்டும்.*

*3. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரங்களின் படிவத்தின் மேல் இடது மூலையில் முத்திரையிடப்பட்ட உறையில் துண்டிக்கப்பட வேண்டும். அதில் டெண்டர் செய்யப்பட்ட அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளபடி மதுக்கடையில் எண் மற்றும் பெயரைத் தெளிவாகக் குறிக்க வேண்டும் "கள்ளுக்கான டெண்டர் மதுக்கடை எண் 13 பம்பல " டெண்டர் பெட்டியில் டெபாசிட் செய்யப்பட வேண்டும் அல்லது பதிவு செய்யப்பட்ட அட்டையின் கீழ் 2022.06.01 அன்று காலை 10.30 மணிக்கு முன் பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், மாதம்பே என்ற முகவரிக்கு சென்றடைய வேண்டும்.*

*4. ஒப்பந்தப் புள்ளிகள் ஓகத்து 20 திகதியிட்ட இலங்கைக் குடியரசின் ( இலங்கை) எண் 207 இல் வெளியிடப்பட்ட கள் வாடகை விற்பனை நிபந்தனைகளுக்கு இணங்க வேண்டும்.*

*5.டெண்டர்கள் முடிந்த உடனேயே 2022.06.01 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு டெண்டர்கள் திறக்கப்படும். டெண்டர்கள் திறக்கும் போது டெண்டர்கள் இருக்க வேண்டும்.*

*6.விற்கப்படாத மதுவுக்கான மறுவிற்பனை 2022.07.01 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு நடைபெறும் வர்த்தமானி அறிவிப் பில் தோன்றும் அதே தேவைகளுக்கு உட்பட்டு இருந்தால்*

*இது தொடர்பாக மேலதிக விபரங்களை மாதம்பை பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.*

*ஏ. எம். சீ. எம். பிரேமசூரிய,*
*பிரதேச செயலாளர்,*
*மாதம்பை.*

*பிரதேச செயலகம்,*
*மாதம்பை,*
*2022.04.25.*

### அட்டவணை

| பிரிவு | கிராமம் | தவறணை திறக்கும் நேரம் | தவறணை மூடும் நேரம் | தவறணை எண். | டெண்டர் பெறுவதற்கான இறுதித் திகதி | கேள்வி வைப் புத் தொகை ரூபா ச. |
|---|---|---|---|---|---|---|
| வடக்கு பிடிகல் பவளம் | பம்பல | காலை 11.00<br>மாலை 5.00 | மாலை 2.00<br>மாலை 8.00 | 13 | 2022.06.01 காலை 10.30 மணி | 1,000.00 |

5-05

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(3) ஆம் பிரிவின் கீழானது,*
*LOLC ஹோல்டிங்ஸ் பீஎல்சீ உடன் புரஸ்பெயார் ரியலிடி (பிரைவட்) லிமிட்டடின் ஒன்றிணைத்தலை நிறைவு செய்தல் பற்றிய அறிவித்தல்*

மேற்குறித்த விடயம் தொடர்பில் கொழும்பில் சுற்றோட்டத்திற்கு விடப்படுகின்ற "தினசரி மௌபிம", "தினசரி வீரகேசரி" மற்றும் "டெய்லி சிலோன் டுடே" செய்திப் பத்திரிகைகளில் 2021, நவெம்பர் 15 ஆந் திகதியன்று அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் 2021, நவெம்பர் 26 ஆந் திகதியன்று வெளியிடப்பட்ட புரஸ்பெயார் ரியலிடி ( பிரைவட்) லிமிட்டட்- PB 3854 PV என்ற நிறுவனத்தை LOLC ஹோல்டிங்ஸ் பீஎல்சீ - PQ 70 நிறுவனத்துடன் முன்மொழியப்பட்ட ஒன்றிணைத்தலை பற்றிய முன்னைய அறிவித்தலுக்கு மேலதிகமாக, ஒன்றிணைத்தல் நிறைவுபெற்றுள்ளது என்றும், ஒன்றிணைத்தல் நடைமுறைக்கு வரும் திகதியானது கம்பனிகள் சட்டத்தின் பகுதி VIII இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(1) (அ) பிரிவின் கீழ் 2022, மாச்சு 12 ஆந் திகதியாகவிருக்கும் என்றும் நாம் இத்தால் அறிவித்தல் வழங்குகின்றோம்.

அதற்கமைய 2022, மாச்சு 12 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் புரஸ்பெயார் ரியலிடி ( பிரைவட்) லிமிட்டட் செயற்பாட்டில் இல்லை என்பதுடன் அதன் தொடர்ந்திருக்கும் கம்பனி LOLC பீஎல்சீ ஆகும்.

LOLCஹோல்டிங்ஸ் பீஎல்சீ இன் பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

LOLC கோப்பரேட் சேர்விசஸ்
(பிரைவட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்கள்.

2022, ஏப்பிரல் 15.

05- 22

---

## பொது அறிவித்தல்
## நிறுவனத்தின் நிலை மாற்றம்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 11(5) இன் படி பதிவு அலுவலகம் இல. 4A1/1, கேர்ணல் டி ஜி ஜயவர்தன மாவத்தை, கொழும்பு 03 இல் அமைந்துள்ள ADL அஸெட் மனேஜ்மென்ற் லிமிடெட் (PB 3890) இனை, 2022 ஆம் ஆண்டு ஏப்பிறல் 12 ஆந் திகதி நடைபெற்ற அசாதாரண பொதுக் கூட்டத்தில் சட்டத்தின் 29 ஆம் பிரிவின்படி தனியார் நிறுவனமாக சட்டத்தின் பிரிவு 11(2) இன் படி வரையறுக்கப்பட்டுள்ளதன்படி ADL அஸெட் மனேஜ்மென்ற் பிரைவேற் லிமிடெட் ஆக மாற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டது என்பது அதன் பங்குதாரர்களுக்கு அறியத்தரப்படுகின்றது.

எஸ்ஜேகோர்ப்பரேட் சேர்விசஸ் (பிரைவட்) லிமிடெட்
காரியதரிசிகளின் உத்தரவின்படி,

05-49

---

## பொது அறிவித்தல்
## நிறுவனத்தின் நிலை மாற்றம்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 11(5) இன் படி பதிவு அலுவலகம் இல. 4A1/1, கேர்ணல் டி ஜி ஜயவர்தன மாவத்தை, கொழும்பு 03 இல் அமைந்துள்ள ADL கெப்பிட்டல் லிமிடெட் (PB 3822) இனை, 2022 ஆம் ஆண்டு ஏப்பிறல் 12 ஆந் திகதி நடைபெற்ற அசாதாரண பொதுக் கூட்டத்தில் சட்டத்தின் 29 ஆம் பிரிவின்படி தனியார் நிறுவனமாக சட்டத்தின் பிரிவு 11(2) இன் படி வரையறுக்கப்பட்டுள்ளதன்படி ADL கெப்பிட்டல் பிரைவேற் லிமிடெட் ஆக மாற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டது என்பது அதன் பங்குதாரர்களுக்கு அறியத்தரப்படுகின்றது.

எஸ்ஜய்கோர்ப்பரேட் சேர்விசஸ் (பிரைவட்) லிமிடெட்
காரியதரிசிகளின் உத்தரவின்படி,

05-50

---

## பொது அறிவித்தல்
## நிறுவனத்தின் நிலை மாற்றம்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 11(5) இன் படி பதிவு அலுவலகம் இல. 4A1/1, கேர்ணல் டி ஜி ஜயவர்தன மாவத்தை, கொழும்பு 03 இல் அமைந்துள்ள ADL ஈகவெட்டீஸ் லிமிடெட் (PB 4624) இனை, 2022 ஆம் ஆண்டு ஏப்பிறல் 12 ஆந் திகதி நடைபெற்ற அசாதாரண பொதுக் கூட்டத்தில் சட்டத்தின் 29 ஆம் பிரிவின்படி தனியார் நிறுவனமாக சட்டத்தின் பிரிவு 11(2) இன் படி வரையறுக்கப்பட்டுள்ளதன்படி ADL ஈக்வெட்டீஸ் பிரைவேற் லிமிடெட் ஆக மாற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டது என்பது அதன் பங்குதாரர்களுக்கு அறியத்தரப்படுகின்றது.

எஸ்ஜய்கோர்ப்பரேட் சேர்விசஸ் (பிரைவட்) லிமிடெட்
காரியதரிசிகளின் உத்தரவின்படி,

05-51

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

பொரலஸ்கமுவ, பெப்பிலியான, N.A.S. சில்வா மாவத்தை, இல. 328/ 17A ஐச் சேர்ந்த சரத் பிரேமலால் வனிகசேக்கர (தே.அ.அ.இல. 572441440V மற்றும் இலங்கை கடவுச் சீட்டு இல. N 7139975) ஆகிய நான், அபித்தா கொடகே ஜகத் மைத்ரீ (தே.அ.அ.இல. 195630300950) மற்றும் சிமித்ர ஆரச்சிகே தேன பிரிசிலா ரேணுகா குணவர்தன (தே.அ.அ.இல. 196474901588) ஆகியோருக்கு வழங்கப்பட்ட மேற்கு அவுஸ்திரேலியா பேர்த் பகிரங்க நொத்தாரிசு டேவிட் மோர்கன்லெவிஸ் இனால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2020, ஓகத்து 24 ஆந் திகதியிடப்பட்ட விசேட அற்றோணித் தத்துவத்தை என்னால் இப்போது இரத்துச் செய்து இல்லாதொழிப்பதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

சரத் பிரேமலால் வனிகசேக்கர.

05- 24

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

பொரலஸ்கமுவ, பெப்பிலியான, N.A.S. சில்வா மாவத்தை, இல. 382/ 17A ஐச் சேர்ந்த சரத் பிரேமலால் வனிகசேக்கர (தே.அ.அ.இல. 572441440V மற்றும் இலங்கை கடவுச் சீட்டு இல. N 7139975) ஆகிய நான், அபித்தா கொடகே ஜகத் மைத்ரீ (தே.அ.அ.இல. 563030950V) இற்கு வழங்கப்பட்ட பகிரங்க நொத்தாரிசு சரத் ஹெந்தவிதாரனவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2015.04.28ஆந் திகதியிடப்பட்ட அற்றோணித் தத்துவ இல. 1913 ஐ என்னால் இப்போது இரத்துச் செய்து இல்லாதொழிப்பதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கு இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

சரத் பிரேமலால் வனிகசேக்கர.

05- 25

---

### வழக்கறிஞரின் அதிகாரத்தை இரத்துச் செய்தல்

நான், ஜெரோம் டிராவிஸ் மார்ட்டின் ( பாஸ்போாட் இல. N 7090959 மற்றும் தேசிய அடையாள அட்டை இல.822030947V) இல.13, 1 ஆவது லேன், அங்குலான, ஸ்டேஷன் ரோட், மொரட்டுவ, இலங்கை தற்போது B-30-06, நிடோஸ் ரெசிடன்செஸ், இல. 22A இல் வசிக்கிறார். 2/ 125, தேச பெட்டாலிங், 57100, மலேசியாவில் கோலாலம்பூர் , 2021, செத்தெம்பர் 30 ஆந் திகதியிட்ட பவர் ஆஃப் அற்றோணி, தூ தரக அதிகாரியும் மலேசியாவிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகர் காரியாலயத்தின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியுமான அன்னே பெர்னாண்டோவால் சான்றளிக்கப்பட்டது என்பதை சம்பந்தப்பட்ட அனைவருக்கும் இதன் மூலம் தெரிவிக்கின்றேன். ஜெஹான் கீத் மார்ட்டின் ( தேசிய அடையாள அட்டை இல. 861351530V) இலக்கம் 13, 1 ஆவது லேன், அங்குலான நிலைய வீதி, மொரட்டுவை 2022.04.01 ஆந் திகதி முதல் இரத்துச் செய்யப்பட்டது. எதிர்காலத்தில் அவர் செய்யும் எந்த செயலுக்கும் நான் பொறுப்பாக மாட்டேன்.

ஜெரோம் டிராவிஸ் மார்ட்டின்.

இல.13, 1 ஆவது லேன், அங்குலான, ஸ்டேஷன் ரோட், மொரட்டுவ, இலங்கை.

B-30-06, நிடோஸ் ரெசிடன்செஸ், இல. 22A இல் வசிக்கிறார். 2/ 125, தேச பெட்டாலிங், 57100, கோலாலம்பூர் மலேசியா.

05-43

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

அங்கொட, ஐ டி எச் மந்தவில வீதி, 7 ஆம் ஒழுங்கை, 22/4 ஆம் இலக்கத்தில் வதியும் கலப்பத்திகே ஆனந்தலீல நெரஞ்சலிகா சரங்கனி டி சில்வா ( தேசிய அடையாள அட்டை இல. 194750900802) ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பொதுமக்களுக்கு அறியத்தருவது யாதெனில், பதிவாளர் நாயக அலுவலகத்தின் 2019, செத்தெம்பர் 24 ஆந் திகதியிடப்பட்ட 16234 ஆம் இலக்க தினப்புத்தகத்தின் கீழ் 288 ஆம் புத்தகத்தில் 43 ஆம் பக்கத்தில் பதிவு செய்யப்பட்டதும் மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், நுகேகொட, சப்பல் வீதி, 36 ஆம் இலக்கத்தில் வதியும் ஜசிந்தா றோமனி பியற்றிஸ் கொலம்பகே ( அல்லது சிகிலார்) (தேசிய அடையாள அட்டை இல. 578050183V) மற்றும் நுகேகொடை, ஏக்கநாயக்க அவென்யு, 15/ 1 ஆம் இலக்கத்தில் வதியும் லிலானி சிர்லீன் சாப்ரெர் ( தேசிய அடையாள அட்டை இல. 457202679V) ஆகியோருக்கு வழங்கப்பட்டதும் பிரசித்த நொத்தாரிசு எச்.ரி. மெத்யூஸ் அவர்களால் அத்தாட்சிப்படுத்திய 2019, ஓகத்து 08 ஆந் திகதியிடப்பட்ட 1464 ஆம் இலக்க பொது அற்றோணித் தத்துவம் இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது என்பதாகும். அத்துடன் எனது சார்பாக அவர்களால் மேற்கொள்ளப்படும் எக்காரியத்திற்கும் நான் பொறுப்பாளியல்ல.

கலப்பத்திகே ஆனந்தலீல நெரஞ்சலிகா
சரங்கனி டி சில்வா .

05- 46

# ஏல விற்பனைகள்

## சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்*

பேன் ஓடீயோ (பிறைவெட்) லிமிட்டெட்
கணக்கு இலக்கம் : 0001 1000 5229

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2019.12.19ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2021.02.19ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2021.02.19ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான ஐந்து கோடியே தொண்ணூற்றி இரண்டு இலட்சத்து எழுபதாயிரத்து எழுநூற்று எழுபத்தி நான்கு ரூபா முப்பத்தி ஐந்து சதம் (ரூபா 5,92,70,774.35) 2019, நவெம்பர் 29 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தி தீர்க்கும் திகதி வரை ஐந்து கோடியே அறுபத்தி ஒரு இலட்சத்து தொண்ணூற்றி மூவாயிரத்து நூற்று தொண்ணூற்றி ஒன்பது ரூபா முப்பது சதம் (ரூபா 5,61,93,199.30) கட்டணத்திற்காக at the rate of Average Weighted Prime Lending Rate + வருடாந்தம் நூற்றுக்கு மூன்று வீதம் (AWPLR +3%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இல. 1485 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2022, மே 26 ஆந் திகதி மு.ப. 11.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

### மேற்குறிப்பீடு செய்யப்பட்ட முதலாவது அட்டவணை

1. மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், பாணந்துறை தொட்டமுனே பாணந்துறை தல்பிட்டி தெபெத்த பாணந்துறை பிரதேச சபை எல்லைகளுக்குள் (கெசெல்வத்தை உப அலுவலகம்) மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் கெசெல் வத்தை இல. 672A கிராம அலுவலர் பிரிவின் கெசெல்வத்தை கிராமத்தில் அமைந்த திக்கல தொட்டுபொல வீதி வரிமதிப்பீட்டு இல. 294/148 ஐ ஏற்ற "தற்போது ரஸ்கின் ஐலண்ட் என அழைக்கப்படும் பெலிதூவ ஐலண்ட்" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே. டீ. பீ. வீரசிங்ஹ என்பவரால் தயாரிக்கப்பட்ட 1997, ஒற்றோபர் 09 ஆந் திகதியிடப்பட்ட இல. 1309 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 5 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : லொட் X ; கிழக்கு : லொட் U ; தெற்கு : லொட் 4 மற்றும் மேற்கு: லொட் P, ஆகிய இவ் எல்லைகளுக்கு அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் மற்றும் இருபத்தி நான்கு தசம் ஒன்பது இரண்டு பேர்ச் (0ஏ. 1றூ. 24.92பே.) அல்லது 0.1642 Hec. விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 1309 அமைவாக பாணந்துறை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் D 88/107 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

உத்தரவுபெற்ற நில அளவையாளர் சீ. ஈ. என். ஜயவர்தன என்பவரால் தயாரிக்கப்பட்ட 1995, செத்தெம்பர் 13 ஆந் திகதியிடப்பட்ட இல. 721 எனும் வரைபடத்தில் லொட் 1 மற்றும் இல. 1309 எனும் வரைபடத்தில் லொட் A, I, O, R, S மற்றும் U ஊடாகவும் அதன் மீதும் பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகளும் பிரதான பூமியிலிருந்து தீவுகளுக்குள் வரையான ஃபெரி சேவைகளும் மற்றும் படகு துறையை பாவிப்பதற்கான உரிமைகளுடனானது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

05-17

---

## சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்*

தி ஒஃபீஸ் ஷொப் (பிரைவெட்) லிமிட்டெட்
கணக்கு இலக்கம் : 0222 1000 0023

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2020.09.24ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2020.11.06ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2020.11.09ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான மூன்று கோடியே

பதினைந்து இலட்சத்து எண்பதாயிரத்து எழுநூற்றறுபத்தெட்டு ரூபா எண்பது சதம் (ரூ. 31,580,768.80) 2020, செத்தெம்பர் 09ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை இரண்டு கோடியே அறுபத்தொன்பது இலட்சத்து பதினோராயிரத்து நானூற்றறுபத்தெட்டு ரூபா எண்பத்தாறு சதம் (ரூ. 2,69,11,468.86) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினாறு தசம் ஐந்து வீதம் (16.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள் 917, 1423, 1755, 1516 மற்றும் 2331 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2022.06.09 ஆந் திகதி இல. 5492 ஐ ஏற்ற வரைபடத்தின் லொட் A மு.ப. 11.00 மணி முதல் மற்றும் இல. 3488 ஐ ஏற்ற வரைபடத்தில் லொட் 2 மு.ப. 11.30 மணி முதல் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

### மேற்குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை

1. கூறப்பட்ட சிங்ஹபிட்டியவில் அமைந்த கம்பொலை இஹலை சிங்ஹபிட்டியவில் அமைந்த வரிமதிப்பீட்டு இல. 15 ஐ ஏற்ற "சிங்ஹபிட்டிய எஸ்ட்டேட்டின் ஒரு பகுதி" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். எஸ். பீ. கருணாரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட 2003, செத்தெம்பர் 01 ஆந் திகதியிடப்பட்ட இல. 5492 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் A எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு : சிங்ஹபிட்டிய எஸ்ட்டேட்டின் எஞ்சிய பகுதி ; கிழக்கு : கம்பொலை முதல் ரத்மல்கடுவ வரையான பிரதான வீதி ; தெற்கு : சிங்ஹபிட்டிய எஸ்ட்டேட் (அரச காணி) எஞ்சிய பகுதியைப் பிரிக்கும் நீர் ஓடை ; மேற்கு : சிங்ஹபிட்டிய எஸ்ட்டேட் எஞ்சிய பகுதியைப் பிரிக்கும் கல்வேலி ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு ஏக்கர் பத்து பேர்ச் (1ஏ. 0றூ. 10பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 5492 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

கூறப்பட்ட லொட் A கீழே விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும்.

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், உடபலாத்த கங்க பாஹால கோரலே உடபலாத்த நகர சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவிற்குள் மற்றும் சிங்ஹபிட்டிய கிராம அலுவலர் பிரிவின் சிங்ஹபிட்டியவில் அமைந்த கம்பொலை இஹலை சிங்ஹபிட்டியவில் அமைந்த வரிமதிப்பீட்டு இல. 15 ஐ ஏற்ற "சிங்ஹபிட்டிய எஸ்ட்டேட்டின் ஒரு பகுதி" என்றழைக்கப்படும் காணிக்கு (உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எச். டீ. ஜீ. கே. பீ. ரொட்றிகோ என்பவரால் தயாரிக்கப்பட்ட 1970, சனவரி 26 ஆந் திகதியிடப்பட்ட இல. 329 லொட் 2B என தவறாகப் பதிவுசெய்யப்பட்ட) உத்தரவுபெற்ற நில அளவையாளர் பீ. எம். எஸ். பீ. கருணாரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட 1983, சனவரி 23 ஆந் திகதியிடப்பட்ட இல.670 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு : சிங்ஹபிட்டிய எஸ்ட்டேட்டின் எஞ்சிய பகுதி ; கிழக்கு : கம்பொலை முதல் ரத்மல்கடுவ வரையான பிரதான வீதி ; தெற்கு : சிங்ஹபிட்டிய எஸ்ட்டேட் (அரச காணி) எஞ்சிய பகுதியைப் பிரிக்கும் நீர் ஓடை ; மேற்கு : சிங்ஹபிட்டிய எஸ்ட்டேட் எஞ்சிய பகுதி ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு ஏக்கர் பத்து பேர்ச் (1ஏ. 0றூ. 10பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 670 எனும் வரைபடத்திற்கு கம்பொலை காணிப்பதிவகத்தில் பரிமாணம்/ E 40/ 133 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

(இலக்கங்கள் 917, 1423 மற்றும் 1755 எனும் ஈட்டுமுறியின் மீது பிணையாக அடகு வைக்கப்பட்டுள்ளது.)

2. கூறப்பட்ட சிங்ஹபிட்டியவில் அமைந்த கம்பொலை ரத்மல்கடுவ வீதி, வரிமதிப்பீட்டு இல. 70/2 ஐ ஏற்ற "சிங்ஹபிட்டிய எஸ்ட்டேட்" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. எம். எஸ். பீ. கருணாரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட 2016, ஓகத்து 18 ஆந் திகதியிடப்பட்ட இல. 8520 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 2 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு : வரிமதிப்பீட்டு இல. 72 ஐ ஏற்ற வளவுகளைப் பிரிக்கும் சுவர் ; கிழக்கு : லியனமுள்ள கும்புர எனும் மகுருவெல கும்புர ; தெற்கு : வரிமதிப்பீட்டு இல. 66 ஐ ஏற்ற வளவுகளைப் பிரிக்கும் சுவர் ; மேற்கு : லொட் 1 மற்றும் லொட் 3 (பிரவேசம்) ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் இரண்டு தசம் எட்டு ஐந்து பேர்ச் (0ஏ. 1றூ. 2.85பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 8520 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

கூறப்பட்ட லொட் 2 மீள் அளவீடு செய்யப்பட்டுள்ளதுடன் அது கீழ்க்கண்டவாறு விபரிக்கப்பட்டுள்ளது.

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், உடபலாத்த கங்க பாஹால கோரலே உடபலாத்த பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவிற்குள் மற்றும் சிங்ஹபிட்டிய கிராம அலுவலர் பிரிவின் சிங்ஹபிட்டியவில் அமைந்த

கம்பொலை ரத்மல்கடுவ வீதி, வரிமதிப்பீட்டு இல. 70/2 ஐ ஏற்ற ''சிங்ஹபிட்டிய எஸ்ட்டேட்'' என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. எம். எஸ். பீ. கருணாரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட 1996, யூன் 23 ஆந் திகதியிடப்பட்ட இல. 3488 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 2 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு : வரிமதிப்பீட்டு இல. 72 ஐ ஏற்ற வளவுகளைப் பிரிக்கும் கம்பி வேலி ; கிழக்கு : லியனமுள்ள கும்புர எனும் மகுரவெல கும்புர ; தெற்கு : வரிமதிப்பீட்டு இல. 66 ஐ ஏற்ற வளவுகளைப் பிரிக்கும் நிரந்தர வேலி ; மேற்கு : வரைபட இல. 3488 இன் லொட் 3 (பிரவேசம்) மற்றும் லொட் 1 ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் மற்றும் இரண்டு தசம் எட்டு ஐந்து பேர்ச் (0ஏ. 1றூ. 2.85பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 3488 எனும் வரைபடத்திற்கு அமைவாக கம்பொலை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் E 45/ 139 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

உத்தரவுபெற்ற நில அளவையாளர் பீ. எம். எஸ். பீ. கருணாரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட 1996, யூன் 23 ஆந் திகதியிடப்பட்ட இல. 3488 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 3 மீதும் அதன் ஊடாகவும் பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகளுடனானது.

(இலக்கங்கள் 1516 மற்றும் 2331 எனும் ஈட்டுமுறியின் மீது பிணையாக அடகு வைக்கப்பட்டுள்ளது.)

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

05- 18

---

**ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ - நாராஹேன்பிட்டக் கிளையின் பகிரங்க ஏல விற்பனை**

(முன்னர் வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி என அறியப்பட்ட)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

பெறுமதிமிக்க ஆதனம் ஏல விற்பனை

**கொழும்பு பிரசித்த நொத்தாரிசு கே.ஜீ.என். சில்வாவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும், ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல். சீ. யின் பெயருக்கு எழுதப்பட்டதுமான 2018, நவெம்பர் 19ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1407ஆம் இலக்க முறி மீது கடனாளியாக வடுகே கிஹான் மதுஷங்க பிரணாந்து என்பவருக்கு ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.யினால் வழங்கப்பட்ட வீட்டுக் கடன் தொகைக்காக பாதுகாப்பாக இங்கு குறிப்பிடப்பட்டுள்ள காணி ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்திற்கு ஈடு வைக்கப்பட்டுள்ளதாலும்,**

**ஆதலால், மேற்குறிப்பிடப்பட்ட வடுகே கிஹான் மதுஷங்க பிரணாந்து அவர்களுக்கு ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. யினால் வழங்கப்பட்ட கடன் வசதிகளினால் உண்மையிலேயே பயனடைபவர் என்பதனால், ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. யினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் அதே முறியின் கீழ் அறவிடப்படவேண்டிய சகல கடன்தொகை, எல்லாக் கொடுப்பனவுகள் மற்றும் ஏல விற்பனைக் கட்டணம் உட்பட சகல பணத்தொகையும் அறவிடுதற் பொருட்டு, இங்கு கீழ்க் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள காணி.**

**2022 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு என்னால் அக்காணி அமைந்துள்ள இடத்திலேயே பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.**

இந்த ஏல விற்பனையானது சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள கொவிட் 19 நெறிமுறைகளைப் பின்பற்றுவதற்கான கண்டிப்பான வழிகாட்டுதலுக்கேற்ப நடாத்தப்படும்.

**ஆதனத்தின் விபரம்.-**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில், சல்பிற்றி கோரளையில் பள்ளேபற்றுவில் தெஹிவளை பிரதேச செயலாளர் பிரிவிற்குள் மற்றும் தெஹிவளை - கல்கிஸ்ஸை மாநகர எல்லைக்குள் 539/4- கவுடான கிழக்கு கிராம அலுவலர் பிரிக்குள் நிகபே கிராமத்தில் அமைந்துள்ள வரிமதிப்பீட்டு இலக்கம் 56/2- நிகபே வீதி, போகஹவத்த என அழைக்கப்படும் இடத்துக்கு உரிமம் பெற்ற நில அளவையாளர் ஜே. ஏ. டப். குணவர்தனவினால் 1952, சனவரி 07 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட இலக்கம் 07 ஐக் கொண்ட வரைபடத்தில் 2C எனக் காட்டப்பட்டுள்ள பதின்மூன்று தசம் ஆறு ஒன்பது பேர்ச் (0ஏ.0றூ.13.69பே.) விஸ்தீரணமுடைய காணி மற்றும் அதில் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள் மற்றும் பயிர்செய்கைகள் மற்றும் அத்துடனான எல்லாம்.

**ஆதனத்திற்கு உட்பிரவேசிக்கும் வழி.-** தெஹிவளை சந்தியிலிருந்து மஹரகம வீதியில் 1.5 கி.மீ. அளவு பயணிக்கும் போது சந்திக்கும் நெதிமாலை சந்தியிலிருக்கும் நிகபே வீதியில் சுமார் 300 மீற்றர் அளவு செல்லும் போது தென்படும் பத்து (10) அடி அகலமான வீதியின் வலது புறத்தில் இருக்கும் மல்டிபேண்ட் என்ட் ஹாட்வெயார் என்ற பெயருள்ள கடையைத் தாண்டி மேலும், 30 மீற்றர் தூரம் பயணித்ததன் பின்னர், வலது புறத்தில் இந்த இடம் அமைந்துள்ளதுடன், அதை இலேசாக கண்டு பிடிக்கலாம்.

***தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.-*** 2021.02.19 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2021.02.25 ஆந் திகதிய ''மவ்பிம'', ''தினக்குரல்'' மற்றும் ''டேலி மிரர் '' ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு முறை.-** உத்தேசக் கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும்:-

(1) கொள்வனவு விலையில் 10% (பத்து வீதம்) ;

(2) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய உள்ளூர் அதிகார சபை வரி 1% (ஒரு வீதம்) ;

(3) ஏல தாரரின் தொழில்சார் கட்டணங்கள்;

(4) மொத்த விளம்பரச் செலவுகள் ;

(5) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூ. 2000;

(6) விற்பனை நிபந்தனைகளை அத்தாட்சிப்படுத்தும் நொத்தாரிசுக் கட்டணம் ரூ. 2000.

கொள்வனவு விலையின் மிகுதி 90% ஐ விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. இற்கு காசாகச் செலுத்த வேண்டும். சொல்லப்பட்ட எஞ்சிய தொகை மேற்குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால் ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% வீதத்தை தண்டப் பணமாக அறவிடவும், ஆதனத்தை மீள் விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரமுண்டு.

**உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆதனங்களையும் பெற்றுக்கொள்ள .**- "சிரேஷ்ட முகாமையாளர் (வணிக அறவீடுகள்) , ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ, இல. 479, ரீ. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10'' என்ற முகவரியில் செலுத்த வேண்டும். தொலைபேசி இல. : 011-2661833, 011-2661826, 011- 2661836.

கே. பிரேமலால் என் சில்வா,
(தீவு முழுவதுக்குமான சமாதான நீதவான்),
நீதிமன்ற ஆணையாளர், சிரேட்ட விலைமதிப்பிடுநர் மற்றும் உத்தரவுபெற்ற ஏலதாரர்.

இல. 109/12A,
கோதமி வீதி,
பொரள்ள, கொழும்பு -8
தொலைபேசி : 077-8441812, 011- 4329335-7

மின்னஞ்சல்: premalalnsilva @ gmail.com

05- 65

---

**ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ — களுத்துறை கிளை**

(முன்னர் வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி என அறியப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

பொதுவான ஏல விற்பனை

அலுபோஹவத்தை என்று அழைக்கப்படும் பின்னகோலாலந்த 1 ஆம் பகுதி என அழைக்கப்படும் பெறுமதியான காணி மற்றும் அலுபோஹவத்தை என்று அழைக்கப்படும் பின்னகோலாலந்தவின் ஒரு A பகுதியானது 11/07 திட்ட இலக்கத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளது என்று 2011, சனவரி 18 ஆந் திகதியில் நாகொட, அலுப்போஹவத்தை, களுத்துறை இல் அமைந்துள்ள எம் வி டி பி ஜயசுந்தர என்ற உரிமம் பெற்ற நில அளவையாளரால் உறுதி செய்யப்பட்டது (காணி எ. கா. 23.20பே.).

அலுபோஹவத்தை என்று அழைக்கப்படும் பின்னகோலாலந்த வின் லொட் ''1'' மற்றும் அலுப்போஹவத்தை என்று அழைக்கப்படும் பின்னகோலாலந்தவின் பகுதி "A"எனக் குறிக்கப்பட்ட நிலத்தின் அனைத்து ஒதுக்கீடுகளும் 11/17திட்ட இலக்கத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளது என்று 2011, சனவரி 18 ஆந் திகதியில் நாகொட இல் அமைந்துள்ள எம். வி.டி.பி. ஜயசுந்தர உரிமம் பெற்ற நில அளவையாளரால் உறுதி செய்யப்பட்டது, களுத்துறை மேற்கு மாகாணத்தில், களுத்துறை பிரதேச செயலகப் பிரிவு, களுத்துறை பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட அலுப்போஹவத்தை, 729A கிராம அலுவலர் பிரிவு, களுத்துறை பத்தேயில் உள்ள களுத்துறை தோட்டமுன்னே வில் இருபத்தி மூன்று தசம் இரண்டு பேர்ச் (0ஏ.0றூ.23.2பே.) கொண்ட கட்டிடம் மற்றும் அனைத்தும் அதன் மீது இருக்கிறது.

M/S B & K பேஷன் கார்மென்ட் இன் ஒரே உரிமையாளரான வேலருமகே கசுன் புத்திக பெர்னான்டோ ஹற்றன் நஷனல் வங்கிக்கு அடமானம் வைத்த சொத்து 2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதியன்று அடமானப் பத்திர இல. 5386 இற்கு கடனாளி கடனைத் திருப்பிச் செலுத்தவில்லை என்று பாணந்துறையைச் சார்ந்த அனுமதிபெற்ற பத்திரத்துறைப் பதிவாளர் P.V.N.W. பெரேரா, இல. 2263, 2018, மே மாதம் 10 ஆந் திகதியில் சான்றழிக்கப்பட்டது மற்றும் களுத்துறையைச் சேர்ந்த அனுமதிபெற்ற பத்திரத்துறைப் பதிவாளர் Y.N.P. De சில்வா இல. 2829, 2020, யூலை 24 இல் சான்றளிக்கப்பட்டது.

ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீயினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் 2022.05.31 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு கீழ் காணப்படும் சொத்து பொது ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

வழங்கப்பட்ட கடனை மீட்டெடுக்க அனைத்து நிலையான கொடுப்பனவுகள் ஏல கட்டணங்கள் தொடர்புடைய அனைத்து செலவுகளும் உள்ளடக்கியதே.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக.**- 2021.05.07 ஆந் திகதியிடப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியிலும் 2021.07.08 ஆந் திகதிய ''மவ்பிம'', ''தினக்குரல்'', ''டெயிலி மிரர்'' ஆகிய பத்திரிகைகளை பார்க்கவும்.

**ஆதனத்தை வந்தடைதல்**- களுத்துறை கட்டுக்குருந்த சந்தியிலிருந்து மடுக்காம வீதியில் மத்திய ஹண்டிய வரை சுமார் 1.25 கிலோ மீற்றர் சென்று இடதுபுறம் உள்ள

ஹீனடிகல வீதிக்கு திரும்பவும், மேலும் சுமார் 350 மீற்றர் தொடர்ந்து ஹீனடிகல வீதியில் வலதுபுறம் திரும்பி ஸ்ரீ சந்தராசனறம வீதிக்கு (12 அடி அகல வீதி) Y சந்திப்பு மற்றும் விளையாட்டு மைதானம் வரை சொல்லப்பட்ட சாலையில் 150 மீற்றர் பயணம் செய்யுங்கள் சர்வே திட்டத்தில் குறிக்கப்பட்டுள்ள பொருள் சந்திப்பை எதிர்கொள்ளும்.

**கட்டணங்கள் செலுத்தும் முறை** .- உத்தேச கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்கு செலுத்த வேண்டும்:-

(1) கொள்வனவு விலையின் 10% ;
(2) உள்ளூராட்சி மன்ற வரி 1 %;
(3) ஏலதாரரின் தரகுப் பணம் ;
(4) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூபா 2,500;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் 2000.00;
(6) விற்பனையில் ஏற்பாடு மொத்த விளம்பரச் செலவு.

மேலும் கொள்வனவு தொகையில் மிகுதி 90% ஏலத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் ஹற்றன் நெஷனல் வங்கி பீஎல்சீக்கு செலுத்த வேண்டும்.மேற்குறிப்பிட்டவாறு மிகுதிப் பணம் குறிப்பிட்ட திகதிக்கு முன்னால் செலுத்தப்படாதவிடத்து செலுத்திய பத்து வீத (10%) பணத்தை பறிமுதல் செய்து அதே காணியை மறு ஏல விற்பனை செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரமுண்டு.

உரித்துறுதி, ஏனைய ஆவணங்கள் மற்றும் விபரங்களை பெற்றுக்கொள்ள கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளிடம் விசாரணைகளை மேற்கொள்ளவும், “சிரேஷ்ட முகாமையாளர் (வர்த்தக அறவீடு), ஹற்றன் நஷனல் வங்கி பீ எல் சீ, 18 ஆவது மாடி H.N.B. டவர்ஸ், இல. 479, ரி. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10.”

தொலைபேசி இல. : 011- 2661833, 011-2661836, 011-2661826.

கே. பீ. என். சில்வா, (ச.நீ.)
சிரேஷ்ட ஏல விற்பனையாளர்,
விலைமதிப்பீட்டாளர்,
மற்றும் நீதிமன்ற ஆணையாளர்.

இல. 109/12A, கோதமி வீதி,
பொரளை, கொழும்பு -08,
தொலைபேசி இல. : 011-2674626, 077-1006829, 077-1316829

மின்னஞ்சல்: Premalalnsilva@gmail.com

05-66

## பேன் ஏசியா பேங்கிங் கோப்பரேசன் பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் ( விசேட ஏற்பாடுகள் ) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பகிரங்க ஏல விற்பனை

பேன் ஏசியா பேங்கிங் கோப்பரேசன் பீ.எல்.சீ யினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ், கீழே குறிப்பிடப்பட்ட ஆதனத்தை கீழே குறிப்பிடப்பட்ட திகதியன்றும் நேரத்திலும் ஸ்தலத்தில் வைத்து பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்வேன்.

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில், கடுவெலப் பிரதேச செயலாளர் பிரிவிலும் மாநகர சபை எல்லைகளிலும், துணந்தஹேன, 488B கிராம அலுவலர் பிரிவினுள் கொறதொட்டக் கிராமத்திலும் அமைந்துள்ளதும் லேக் டெரஸ், 09 ஆவது ஒழுங்கையில் , 29 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டதும் அதன் மீதுள்ள கட்டிடங்கள், பயிர்கள் மற்றும் வேறெல்லாவற்றுடனும் வனபத்துமுக்கலான மறுபெயர் வை தோட்டம் மற்றும் இப்பொழுது லேக் டெரஸ் எனவழைக்கப்படும் காணியினதாய் (உரிமம் பெற்ற நில அளவையாளர், சீ.ஈ.என்.ஜயவர்தன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1994, மாச்சு 10 ஆந் திகதிய 710 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 127 இன் மீள் நிலஅளவையாகவுள்ளதும்) உரிமம் பெற்ற நில அளவையாளர் எச்.எச்.கே. சீ. ஜயலத் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2016.02.05 ஆந் திகதிய 1644 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும் காணித்துண்டம் 01 என அடையாளமிடப்பட்டதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்,

காணியின் விஸ்தீரணம்: 0ஏ.00றூ. 12.45பே.

2022, மே 26 ஆந் திகதியன்று மு.ப. 10.00 மணிக்குத் தொடங்கும்.

“கடப்பாட்டாளராக” மணிக்குவடு விதுர டி சில்வா மற்றும் “ஈடுவைப்பவராக” மணிக்குவடு டேர்வின் டி சில்வா என்போர், கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஏ.வீ.என். சந்திமா என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2017.08.11ஆந் திகதிய 593 ஆம் இலக்க முதனிலை ஈட்டுமுறிமீது வருமதியாகவுள்ள கொடுப்பனவைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளனரென்று,

**தீர்மானம் பற்றிய அறிவித்தல்களுக்கு** .- 2021.05.07ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் மற்றும் 2021.04.23ஆந் திகதிய த ஐலன்ட் , திவயின மற்றும் தினக்குரல் பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்துக்கான அணுகுகை**.- கடுவெலப் பட்டினத்திலிருந்து அவிசாவெல்ல வீதிவழியாக வெலேவத்த சந்தி வரை செல்வதன் மூலம் ஆதனத்தைச் சென்றடையமுடியும். பின்னர் ஏறத்தாழ 8 கிலோ மீற்றர் தூரம் வரை ஷாந்தலோக்ககம வரை அதுறுகிரிய வீதிக்கு வலதுபக்கமாகத் திரும்பி, புத்த சிலைக்கண்மையில் லேக் டெரஸுக்கு இடதுபக்கமாகத் திரும்பி

*ஏறத்தாழ 200 மீற்றர் தூரத்துக்குப் பயணித்து இறுதியாக 9 ஆவது ஒழுங்கைக்கு வலது பக்கமாகத் திரும்பி ஏறத்தாழ 150 மீற்றர் தூரத்துக்குப் முன் செல்லவும், ஆதனம் வீதியின் இடது பக்கத்திலுள்ளது.*

**கொடுப்பனவு முறை**.- பின்வரும் தொகைகள் காசாக ஏல விற்பனையாளருக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

1.கொள்வளவு விலையில் 10%;

2. 1% உள்ளூரதிகார சபை விதிப்பனவுகளும் அதன்மீதான சேபெவ விதிப்பனவுகளும்;

3.ஏல விற்பனையாளரின் தரகான கொள்வனவு விலையின் 2.5 % ( இரண்டரைச் சதவீதம் மட்டும்)

4. விற்பனையின் மொத்தச் செலவு தொகையும் ஏனைய விதிப்பனவுகளும்;

5. விற்பனைய நிபந்தனைக்காக நொத்தாரிசுவின் அத்தாட்சிப் படுத்துகைக் கட்டணங்கள் (ரூ.7,000.00);

கொள்வனவு விலையின் மீதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களினுள் வங்கிக்குச் செலுத்தப்படுதல் வேண்டும். சொல்லப்பட்ட தொகை மேலே விதிக்கப்பட்டவாறு 30 நாட்களினுள் செலுத்தப்படாவிடின், வங்கியானது ஏலவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% சதவீதத்தை இழப்பிப்பதற்கும் ஆதனத்தை மீள விற்பனை செய்வதற்கும் உரிமையுடையதாதல் வேண்டும்.

உரித்துறுதிகளும் வேறு சம்பந்தப்பட்ட ஆவணங்களும் கொழும்பு 3, காலி வீதி, இல. 450, தலைமையலுவலகம், பான் ஏஷியா வங்கித் தொழிற் கூட்டுத்தாபனம் பீ.எல்.சீ., அறவீடுகள் முகாமையாளரிடம் பார்வையிடப்பட்டு பெற்றுக் கொள்ளப்படலாம். தொலைபேசி இல.: 011- 4667229.

துசித்த கருணாரத்ன,
நீதிமன்ற ஆணையாளர்
மற்றும் உரிமம் பெற்ற
ஏல விற்பனையாளர்.

இல.182/3, (50/3),
விஹார மாவத்தை,
கொலொன்னாவ.

தொலைபேசி இல.:011-3068185, 071- 4177199.

05- 11

---

**பேன் ஏசியா பேங்கிங் கோப்பரேஷன் பீ.எல்.சீ.**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பகிரங்க ஏல விற்பனை

பேன் ஏசியா வங்கித் தொழிற் கூட்டுத்தாபனம் பீ.எல்.சீ. இனால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ், கீழே குறிப்பிடப்பட்ட ஆதனத்தைக் கீழே குறிப்பிடப்பட்ட திகதியன்றும் நேரத்திலும் ஸ்தலத்தில் வைத்து பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்வேன்.

1. வடமத்திய மாகாணம், அநுராதபுர மாவட்டத்தில் 255 கட்டம் III- பிரிவு I இன் கிராம அலுவலர் பிரிவிலுள்ள நுவரகம் பலாத்த கிழக்கின் பிரதேச செயலாளர் பிரிவில் அநுராதபுரம் பட்டினத்தில் அமைந்துள்ளதும் 110210 ஆம் இலக்க நில அளவீட்டு வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும் 05 ஆம் இலக்கத் தொகுதியிலுள்ளதுமான 155 ஆம் இலக்கத் துண்டம்.

( காணியின் விஸ்தீரணம்:0.0378 ஹெக்டயார்.)

2022, மே 27 ஆந் திகதியன்று மு.ப. 11.00 மணிக்கு தொடங்கும்.

"கடப்பாட்டாளராக /ஈடுவைப்பவராகப் " பிரான்சிஸ்கு படுகே கயனக் கிறிஷாந்த டி சில்வா என்பவர், அநுராதபுரத்தைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஏ.வீ. ஏ. திசாநாயக்க என்பவரினால் இரண்டும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2017.08.21 ஆந் திகதிய 9054 ஆம் இலக்க முதனிலை ஈட்டுமுறிமீது 9055 ஆம் இலக்க இரண்டாம்நிலை ஈட்டுமுறிமீது வருமதியாகவுள்ள கொடுப்பனவைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளாரென்று.

**ஆதனதுக்கான அணுகுகை**.- அநுராதபுரம் புதிய பட்டினத்திலிருந்து தஹாய்யகம நான்குவழிச் சந்திவரை ஏறத்தாழ 750 மீற்றர் தூரத்துக்கு மைத்திரிபால சேனாநாயக்க மாவத்தை வழியாகச் செல்லவும். பின்னர் டீ.எஸ். சேனாநாயக்க மாவத்தைக்கு இடதுபக்கமாகத் திரும்பி, SOS சந்தி வரை ஏறத்தாழ 1. கி.மீ. தூரத்துக்குச் சென்று அக்போ மாவத்தைக்கு வலது பக்கமாகத் திரும்பி விடயப்பொருளாகவுள்ள ஆதனத்தை அடைவதற்கு ஏறத்தாழ 400 மீற்றர் தூரத்துக்கு (நீர்க்கோபுரத்துக்கு முன்னர் 50 மீற்றர்) செல்லவும். விடயப் பொருளாகவுள்ள ஆதனம், வீதி முகப்புடன் மேற்படி வீதியின் வலதுகைப் பக்கத்தில் உள்ளது.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு**.- 2020.12.24 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் மற்றும் 2020.12.18 ஆந் திகதிய "திவயின", "ஜலண்ட்" மற்றும் "தினக்குரல்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு முறை**.- பின்வரும் தொகைகள் காசாக ஏல விற்பனையாளருக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

1.கொள்வளவு விலையில் 10%;

2. 1% உள்ளூரதிகார சபை விதிப்பனவுகளும் அதன்மீதான சேபெவ விதிப்பனவுகளும்;

3.ஏல விற்பனையாளரின் தரகான கொள்வனவு விலையின் 2.5 % ( இரண்டரைச் சதவீதம் மட்டும்)

4. விற்பனையின் மொத்தச் செலவு தொகையும் ஏனைய விதிப்பனவுகளும்;

5.விற்பனைய நிபந்தனைக்காக நொத்தாரிசுவின் அத்தாட்சிப் படுத்துகைக் கட்டணங்கள் (ரூ.3,000.00;

கொள்வனவு விலையின் மீதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களினுள் வங்கிக்குச் செலுத்தப்படுதல் வேண்டும். சொல்லப்பட்ட தொகை மேலே விதிக்கப்பட்டவாறு 30 நாட்களினுள் செலுத்தப்படாவிடின், வங்கியானது ஏலவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% சதவீதத்தை இழப்பிப்பதற்கும் ஆதனத்தை மீள விற்பனை செய்வதற்கும் உரிமையுடையதாதல் வேண்டும்.

